செ.வெ.எண் : 634 நாள் : 7.8.2008

# உலக தாய்ப்பால் வாரம்
# 1 – 7 ஆகஸ்ட் 2008
## தாய்க்கு ஆதரவு – தங்கமான குழந்தை

பிறந்த சில மணித் துளிகளிலேயே குழந்தைகளுக்கு தாய்ப்பால் அளிக்கத் துவங்கிட வேண்டும். அது தான்....... அது மட்டுமே தான் ...... குழந்தைக்கு உன்னதமான வாழ்க்கைக்கு சிறப்பான துவக்கமாக இருக்க முடியும். இதனை மறுப்பதற்கில்லை. குழந்தைகளின் அனைத்து வளர்ச்சிகளும் முழுமையாக ஏற்படுவதற்குத் தேவையான தூண்டுதலை தாய்ப்பால் தருகின்றது. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஒரு பரிபூரண உணவாக அமைகின்றது. தாயாரிடமிருந்து குழந்தை தாய்ப்பாலை பெறுவது அக்குழந்தையின் உரிமை என கூறப்படுகிறது. இந்த உரிமை என்றும் எவராலும் பறிக்கப்படக் கூடாது. குழந்தைகளுக்கு தாய்ப்பால் புகட்டுவது என்பது அக்குழந்தைக்கு தங்கப்பரிசு அளிப்பதற்கு ஒப்பானது எனக் கருதலாம்.

தங்கம் நம் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒரு மதிப்பு வாய்ந்த பொருளாக கருதப்படுகிறது. பித்தளைக்கு இத்தகைய மதிப்பு இல்லை என ஒன்றுபோல கூறுவோம். இல்லையா ? அது போல் தான் குழந்தைக்கு தாய்ப்பாலுக்கு பதில் மாற்று பால் பொருட்களை கொடுப்பது

'தங்கம் இருக்க பித்தளைக்கு அலைவானேன்' ?
'குழந்தைக்கு தாய்ப்பால் இருக்க மாற்றுப் பால் தருவானேன் ? (புட்டி பால்)

மாற்றுப் பால் பொருட்களை குழந்தைக்கு உணவாக கொடுப்பது மூலம் நாம் நம்மையும் நம் குழந்தையும் குறைத்து மதிப்பிட்டுக் கொள்கின்றோம். குழந்தையின் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்க காரணம் ஆகின்றோம்.

தாய்ப்பாலுக்கு நிகர் தாய்ப்பால் தான். இத்தகைய சிறப்பு அம்சம் கொண்ட தாய்ப்பாலினை தாய்மார்கள் அனைவரும் குழந்தைக்கு அளிப்பதற்கு குடும்பத்தினர் சமுதாயத்தினர் பொறுப்பெடுத்துக்கொண்டு ஆதரவு தரவேண்டும் என்பதே இந்த வருடத்தின் தாய்ப்பால் வார காலத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த பட வேண்டிய கருத்தாக எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேகமான காலகட்டத்தில் பெண்களும் குடும்ப நலன் கருதி வேலைக்கு செல்கின்றனர். வேலை நிமித்தத்தின் பேரில் கால தாமதமாக வீட்டிற்கு திரும்பும் சூழ்நிலை நிலவுகின்றது. இருப்பினும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பாலூட்டும் தாய்மார்களுக்கு பல்வேறு வகையில் ஆதரவு அளித்தால் அத்தாய் குழந்தைக்கு நிறைவாகவும், மகிழ்ச்சியுடனும் பால் புகட்ட ஏதுவாக இருக்கும்பாலூட்டும் தாய்க்கு, குடும்பம் மற்றும் சமுதாயம், வேலை மற்றும் வேலை இடம் ஆபத்து மற்றும் இக்கட்டான காலங்களில் உதவுதல், அரசு / சட்டம், சுகாதார பராமரிப்பு ஆகிய வழிகளில் ஆதரவு தந்தோமானால் தங்கம் போன்ற மதிப்பு வாய்ந்த குழந்தையினை வளர்த்து பொறுப்புள்ள பிரஜையாக எதிர்காலத்தில் உருவாக்கிட முடியும். இது தானே

உண்மையில் ஒரு தாய் மற்றும் அவளைச்சார்ந்த குடும்பம், சமுதாயம் ஒரு குழந்தையின் மீது போடுகின்ற முதலீடாகும்,

இக்கருத்தினை வலியுறுத்தி கூறும் வகையில் தான் கடந்த ஒன்றாம் தேதி முதல் ஏழாம் தேதி வரையில் (ஆகஸ்ட் 1–7) சென்னை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் 1345 குழந்தைகள் மையங்கள் வாயிலாக தாய்மார்களுக்கும் அவர்களை சார்ந்த குடும்ப உறுப்பினர்கள், மற்றும் சமுதாய மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து குழந்தைகள் மையத்திலும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தரப்பட வேண்டிய ஆதரவுகள் குறித்த கண்காட்சிகள் வைக்கப்பட்டிருந்தன. இது தவிர குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதம் வரையில் தாய்ப்பால் மட்டுமே போதுமான, பரிபூரணமான உணவு என்பதனை விளக்கும் கருத்துக்களையும் கண்காட்சியில் உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

மைய அளவில் தாய்மார்களையும், புதுமண தம்பதிகளையும் வரவழைத்து தாய்க்கு பாலூட்டும் காலத்தில் தரப்பட வேண்டிய ஆதரவுகள் குறித்து விளக்கப்பட்டன. குழந்தைகள், வளர் இளம் பெண்கள், தாய்மார்கள் ஆதரவு குழுவினர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பலருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

திட்ட அளவிலும் தாய்ப்பால் வாரம் சிறப்பான வகையில் அனுசரிக்கப்பட்டு நல்ல விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் படைப்பாம் – தாய்ப்பாலின் அருமையினை உணர்ந்திருந்தாலும், வெளிப்புற சூழலின் தாக்கத்தினால் மாற்றுப்பாலுக்கு சென்று குழந்தையின் ஆரோக்கியத்தினையும், பொருளாதார சிக்கல்களிலும் மாட்டி கொள்ளும் தாய்மார்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இவ்வார விழா மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியிருப்பது அவர்களிடத்தே நல் மாற்றத்தினை உண்டு பண்ணும் என்று நிச்சயமாக கூறலாம்.

மண் மீதும் பொன் மீதும் போடுவது வீணல்ல – என்ற பழமொழியை கேட்டுள்ளோம். அது போன்றே குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்கள் 6 மாதம் வரையில் அனைவரின் ஆதரவுடன் தாய்ப்பால் மட்டுமே அளித்து (தண்ணீர் கூட வேண்டாம்) வளர்த்தால், திருவள்ளுவரின்

'' ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய் ''

என்ற குறள் உரைக்கும் சிறப்பினை தாய் அடையலாம்.

*********

**பாலூட்டுவது தாயின் உரிமை – அதற்கு துணை நிற்பது நமது கடமை**

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.